
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 38 இதழ் – 1 ஜனவரி – 2025

தனிப்பிரதி
ரூ.10/-



பண்டைய எபேசு பட்டணத்து
தியானாள் தேவதை
கோயிலின் மாதிரி

## டிசம்பர் 14,15 ஆகிய தேதிகளில் வலங்கைமான் மற்றும் நாகப்பட்டினத்தில் நடந்த இலவச மருத்துவ முகாம்களின் போது...









## ஆசானின் அறிவுரையிலே ...


1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. கிறிஸ்துவின் நற்செய்தி 11
3. பெண்கள் பகுதி 14
4. வாலிபர் பகுதி 18
5. சிறுவர் பகுதி 20
6. நாம் நீதிமான்களாயிருக்கிறோம் 21
7. ஒன்று இல்லாமல் மற்றது... 25
8. எபிரெயர் 2 ஆம் அதிகாரம்... 28
9. வேதாகமம் – மனிதனுக்கு... 28

# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 38 January - 2025 Issue - 1


ஆசிரியர் உரை

## எபேசு சபைக்கான இயேசுவின் நிருபம்

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அருளப்பட்டுள்ள இருபத்தேழு நூல்களுள் இருபத்தொரு நூல்கள் நிருபங்களாக உள்ளன. இந்நிருபங்களை எழுதுவதற்குத் தேவன் பவுல், பேதுரு, யோவான், யாக்கோபு, யூதா போன்ற தேவ மனிதர்களைப் பயன்படுத்தியுள்ளார். இறை உணர்வோடு வாழ்பவர்களுக்கும், ஒன்றான மெய்த் தேவனையும் அவருடைய ஒரே பேறான குமாரனையும் ஏற்று வாழ்பவர்களுக்கும் இந்நிருபங்கள் அந்நியமாக இருக்காது. ஆனால், இந்நிருபங்களோடு இயேசு ஆண்டவரால் யோவானைக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ள நிருபங்களும் புதிய ஏற்பாட்டில் இருக்கிறதென்று சொன்னால் அது பலருடைய புருவத்தை உயரச் செய்யும். அத்தோடு, இயேசுவின் நிருபமா? அவை எங்கே இருக்கிறதென்ற கேள்வியும் மனதுக்குள்ளாக வந்து நிற்கும்.

ஆயினும், இயேசுவாலே கொடுக்கப்பட்டுள்ள ***ஏழு நிருபங்கள்*** புதிய ஏற்பாட்டில் இருக்கவே செய்கிறது. அவைகள் மற்ற நிருபங்களைப் போன்று நூல்களாக இல்லையென்பது உண்மையாக இருந்தாலும், நிருபம் என்ற வரையறைக்குட்பட்டே அவைகளும் இருக்கிறது. இந்நிருபங்கள் வெளிப்படுத்தல் நூலின் 2,3 அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளது. இந்த ஏழு நிருபங்களும் அன்றைக்கிருந்த ஆசியாவின் ஏழு பட்டணங்களாகிய எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயாவில் இருந்த ஏழு கிறிஸ்துவின் சபைகளுக்கு எழுதப்பட்டுள்ளது.

ஏன் இந்த ஏழு சபைகளுக்கு மட்டும் இயேசுவால் நிருபங்கள் கொடுக்கப்பட்டதென்பதற்கான காரணங்கள் ஆவியானவரால்

கொடுக்கப்படவில்லை. ஆனால், எண் ***ஏழு*** என்பது ***முழுமைக்கும். பூரணத்துக்குமான*** ஓர் எண்ணாக வேதாகமத்தின் பல இடங்களில் நாம் பார்க்க முடிகிறபடியால், இவைகள் அன்றைக்கும், இன்றைக்கும், என்றைக்கும் இருக்கிற ***எல்லா சபைகளுக்கான நிருபங்களாகவே*** பார்க்கப்பட வேண்டும். யோவான் வாழ்ந்த காலத்தில் இந்த ஏழு சபைகளில் இருந்த பிரச்சனைகளையும், சவால்களையும் இந்திருபங்கள் மையப்படுத்தியி ருந்தாலும், அவைகள் எல்லாக் காலத்திற்கும் சம்பந்தமுடையதாகவே இருக்கிறது. ஆகவே, இந்த இயேசுவின் நிருபங்கள் எல்லாச் சபைகளுக்குமான நிருபங்களாகப் பார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுவது அவசியம்.

கடந்த மாதம், இயேசு ஆண்டவரால் யோவானைக் கொண்டு எழுதப்பட்ட ஏழு நிருபங்களுக்கான பின்னணி பற்றிப் பார்த்தோம். இந்த மாதத்தில் அந்த ஏழில் முதலாவதாக உள்ள வரக்கூடிய எபேசு சபைக்கான நிருபம் பற்றிப் பார்க்க உள்ளோம். அதற்கு முன்பாக நமது வழக்கத்தின்படி இதற்கான பின்னணி பற்றிப் பார்த்து விடுவோம்.

எபேசுப் பட்டணம் அன்றைய ஆசியாவின் பிரதான பட்டணம். இப்பொழுது இப்பகுதி துருக்கி நாட்டில் அமைந்து ***செல்கக் (Secuk)*** என்றழைக்கப்படுகிறது. இன்றைக்கு இப்பட்டணம் சுமார் 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பட்டணமாக இருந்தாலும், முதல் நூற்றாண்டுக் காலத்தில் சுமார் 300 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட மிகப்பெரிய பட்டணமாக இருந்துள்ளது. ஆசியா மாகாண ஆளுநர்கள் இங்கு தான் தங்கியிருந்தனர். சில, பல காரணங்களுக்காக அன்றைய உலகத்தால் விருப்பத்தோடு வந்து செல்லக்கூடிய பட்டணமாக எபேசு இருந்துள்ளது. அதற்கான காரணங்களில் ஒன்று, அன்றைய உலகத்தின் ***ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட தியானாள் கோவில்***. இக்கோவில் பிரம்மாண்ட தோற்றம் கொண்டதாக இருந்துள்ளது. இப்பட்டணத்தில் ஒருவேளை 14 குறிப்பிடத்தக்க கோவில்கள் இருந்தாலும், தியானாள் தேவதைக்கான கோவிலே மிகப் பிரசித்தம். இது 420 அடி நீளம், 240 அடி அகலம் கொண்ட ஒரு மிகப் பெரிய மேடை அமைக்கப்பட்டு, அதன் மீது 380 அடி நீளம். 180 அடி அகலத்துடன் கட்டப்பட்டிருந்தது. இதன் ஒட்டுமொத்த பரப்பளவு இரண்டு கால்பந்து மைதானத்திற்கு சமமானது. இப்பிரமாண்ட கட்டிடத்தை 60 அடி உயரம் கொண்ட 127 தூண்கள் தாங்கிப் பிடித்திருந்தது. ஒவ்வொரு தூணும் அந்த மாகாணத்தில் இருந்த சிற்றரசர்களாலும், பிரபுக்களாலும் இத்தேவதைக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தூண்களில் ஒரு 36 தூண்கள் மிக அழகிய வேலைப்பாடுகள் கொண்டவைகளாக இருந்துள்ளது.

இந்த தியானாள் செழிப்புக்கும், உயிருக்குமான தேவதை. எபேசு

வாணிப ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பட்டணம். கடல் மார்க்கமாகவும், சாலை மார்க்கமாகவும் இது முக்கிய இடத்தில் இருந்தபடியால் ஏராளமானவர்கள் வந்து போகக்கூடிய பட்டணமாக இருந்தது. அத்தோடு, தியானாள் தெய்வத்திற்காகவும், பிரமாண்ட கோயிலுக்காகவும் திரளானவர்கள் வந்து செல்வார். இது போதாதா, ஒரு பட்டணம் ஒழுக்க ரீதியாகச் சீரழிவதற்கு? ஆம், இப்பட்டணத்தில் ஒழுக்கக் கேட்டிற்குத் துளியும் பஞ்சமிருக்கவில்லை. ***பழம் நழுவிப் பாலில் விழுவது போல்*** இன்னும் இக்கோயிலில் தியானாளுக்கு நேர்ந்துவிடப்பட்ட ஏராளமான தேவ தாசிகளும் இருந்திருக்கிறார்கள். இப்படி எல்லாச் சூழலும் கிறிஸ்துவின் நற்செய்திக்கு எதிராக இருந்த எபேசுவுக்குத் தனது முதல் நற்செய்திப் பயணத்தின்போது போயிருந்தாலும் (அப் 18:19-21), தனது மூன்றாம் நற்செய்தி பயணத்தில் பவுலடியார் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்கியிருந்து ***நற்செய்தியின் வல்லமையால்*** கிறிஸ்துவின் சபையை ஏற்படுத்தினார். அத்தோடு நிற்காமல், 'ஆசியாவில் குடியிருந்த யூதரும், கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தருடைய வசனத்தைக் கேட்கும்படி செய்தார் (அப் 19:10). அதன் மூலம் எபேசு தவிர இயேசுவால் நிருபங்கள் எழுதப்பட்ட மற்ற ஆறு சபைகளும் கூட இந்த ஊழியத்தின் வாயிலாகவே ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

சரி, இப்பொழுது இந்த நிருபத்திற்குள்ளாக சென்று நமது பக்தி வாழ்வுக்குப் பயனளிக்கக் கூடிய பாடங்ககளை கவனிப்போம்.

**I. அறிமுகமும், பாராட்டும்**

வெளிப்படுத்தலிலுள்ள ஏழு சபைகளுக்கான நிருபங்களின் வரிசையில் முதலாவது வருவது, எபேசு சபை நிருபம். இவர்களுக்குத் தன்னை ***ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலது கரத்தில் ஏந்திக் கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறவர்*** என்று அறிமுகம் செய்கிறார். நாம் ஏற்கனவே கவனித்தது போல் ஏழு என்பது பூரணத்திற்கும், முழுமைக்குமான ஓர் எண். இயேசுவின் ஏழு சபைகளுக்குமான நிருபங்களை நாம் கவனித்தால், அவருடைய ***அறிமுகத்திலும், ஜெயங் கொள்ளுகிறவர்களுக்கு*** அவர் கொடுக்கும் ***பலனிலும்*** வேறுபாடுகள் இருப்பதைக் காணமுடியும். ஏன் அப்படி என்பதற்கான காரணங்களை அவைகளைப் படிக்கும் போது தெரிந்து கொள்வோம்.

எபேசு சபைக்கு, ஏழு நட்சத்திரங்களைத் தமது வலது கரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்து விளக்குகளின் மத்தியில் உலாவி கொண்டிருக்கிறவர் என்று கூறுகிறார். இந்த ***ஏழு நட்சத்திரங்களும், ஏழு பொன் குத்து விளக்குகளும்*** யோவான் பத்மு தீவில் இருந்தபோது கண்ட பயங்கரமான தரிசனத்தில் இடம்பெற்றிருந்தவையே.

(வெளி 41:13,16) ஏழு நட்சத்திரங்கள், ஏழு சபைகளின் தூதர்கள் என்று சொல்லப்பட்டிருப்பது, சபையை வழிநடத்துபவர்கள் தங்கள் செயல்பாடுகளுக்கு இயேசுவைச் சார்ந்திருக்க வேண்டுமென்பதைப் பொருள்படுகிறது. ஏழு பொன் குத்துவிளக்குகளுக்கு மத்தியில் உலாவிக் கொண்டிருக்கிறவர் என்று சொல்வது, அவர்கள் அவருடைய தொடர் கண்காணிப்பின்கீழ் இருக்கிறார்களென்பதையும், அவர்களுடைய கிரியைகளின்படி ஆசீர்வாதமும், தண்டனையும் இருக்குமென்பதையும் குறிக்கிறது.

முதலாவது இயேசு, நான் உங்கள் ***கிரியைகளை*** அறிந்திருக்கிறேன் என்று கூறுகிறார். ஆம், இயேசு அவருடையவர்களின் எல்லாவற்றையும் அறிந்தவராகவே இருக்கிறார். அவருடைய பார்வைக்கு மறைவானது எதுவுமே இல்லை. இதை நாம் மனதில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படியான அறிமுகத்தைத் தொடர்ந்து, எபேசு சபைக்கான பாராட்டு. மற்ற சபைகளைப் போலல்லாமல் இவர்களுக்கான பாராட்டு ஒரு பட்டியலாகவே உள்ளது. *1.* உன் பிரயாசத்தை. *2.* உன் பொறுமையை *3.* நீ பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமலிருக்கிறதை *4.* அப்போஸ்தலர ல்லாதவர்களைச் சோதித்தறிந்து பொய்யரென்று கண்டறிந்ததை *5.* நீ சகித்துக் கொண்டு பொறுமையாயிருக்கிறதை *6.* என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதை, *7.* நிக்கோலாய் மதத்தவர்களின் கிரியைகளை நீ வெறுக்கிறதை நான் அறிந்திருக்கிறேன். இங்கும் ஏழு வருகிறது (1:23,6) எபேசு சபையாரிடத்தில் பக்தி ரீதியான ***சமரச மனப்பான்மை*** இருக்கவில்லை. நிச்சயமாகவே பாராட்டுக்குரியவர்களே.

அருமையானவர்களே, இன்றைக்கு எத்தனை சபைகளில் காரியங்கள் நன்மையானவைகளாகவும், பட்டியல் போட்டுப் பராட்டும்படியான அளவிலும் உள்ளது? ஒருவேளை, இயேசு ஆண்டவர் நாம் சார்ந்திருக்கும் சபைகளுக்கு மத்தியில் உலா வருவாரானால், நிலைமை எந்தளவில் இருக்கும்?நாம் பொல்லாதவர்களை அதாவது, கிறிஸ்தவ அறத்திற்குப் புறம்பே கிறிஸ்துவின் நற்செய்தி உபதேசத்திற்கு அப்பால் வாழ்பவர்களை, அவர்களின் செல்வாக்கு கருதி சகித்துக் கொண்டிருக்கிறோமா அல்லது கிறிஸ்துவின் உபதேசம் தான் முக்கியம் என்று முடிவெடுத்து அவர்களின் காரியங்களைச் சகிக்காமல் சபையை விட்டு விலக்கியுள்ளோமா? இன்னும், எபேசு சபையார் போல் கள்ள அப்போஸ்தலர்களை வசனங்களின் போதனையினடிப்படையில் இனங்கண்டு அவர்கள் யாரென்று உலகிற்கு அடையாளப் படுத்துகிறோமா? மேலும், அவர்கள் நிக்கொலாய் மதத்தவரின்

கிரியைகளை வெறுத்தது போல், கிறித்தவனாக இருந்து கொண்டு, எதையும் செய்யலாம், எப்படியும் வாழ்ந்து கொள்ளலாம் என்பவர்களை வெறுத்து ஒதுக்குகிறோமா அல்லது என்ன செய்வது என்று பல மனக்கணக்குகள் போட்டு அப்படியே அரவணைத்துச் செல்கிறோமா?

இக்காரியத்தில், 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த எபேசு சபையார் நமக்குக் கற்றுக் கொடுக்கும் பாடத்தை மறவாமல். இயேசுவின் பாராட்டுகளுக்குரியவர்களாக வாழத் தீர்மானிப்போம்.

## II. குறையும், புத்திமதியும்

எபேசு சபைக்கான இயேசுவின் பாராட்டைப் பார்க்கும்போது, இந்த சபையின் செயல்பாடுகளில் அவர் ***முழு திருப்தி*** கொண்டுவிட்டார் என்பது போல் தோன்றுகிறது. ***ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்*** என்று ***உன் பேரில் எனக்குக் குறை உண்டு*** என்று கூறிவிட்டு, அத்தோடு நிற்காமல், ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து ***மனந்திரும்பி*** ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதினிடத்தினின்று நீக்கி விடுவேன் என்றார். (வெளி 2:4,5)

தேவனும், அவருடைய குமாரனும் நீதியுள்ளவர்களாக இருக்கிறார்களென்பதற்கு இது இன்னுமொரு சான்றாக உள்ளது. அங்கீகரிக்க வேண்டியதை அங்கீகரிக்கிறார்கள், கண்டனம் செய்ய வேண்டியதைக் கண்டனம் செய்கிறார்கள். தேவனுக்காக நாங்கள் சில நற்காரியங்களைச் செய்கிறோம். ஆகவே, எங்களுடைய தவறான காரியங்களை இயேசு கண்டுகொள்ள மாட்டார் என்று நாம் என்னுவோமானால் கண்டிப்பாக ஏமாந்து போவோம். கிறித்தவத்தில் பல தவறுகளும், துணிகரச் செயல்பாடுகளும் நற்காரியங்களினிமித்தம் நாங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்கிற சிந்தையினடிப்படையில் தான் ஏகபோகமாக நடந்து கொண்டுள்ளது. பிதாவாகிய தேவனும், அவர்தம் குமாரனாகிய இயேசுவும் இச்சிந்தையை ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டார்கள் என்பது நினைவிலிருக்கட்டும்.

சரி, நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு என்று எதைக் குறிப்பிட்டிருப்பார் ? எபேசு சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தையும், இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தையும் பார்க்கும்போது, இச்சபையில் இருந்த பெரும்பாலானோர் ***இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்கள்*** என்று தெரிகிறது. முதல் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் பவுலடியாரின் ஊழியத்தை நேரில் கண்டு, உபதேசத்தை நேரிடையாக உள்வாங்கியவர்கள். இன்னும்,

மிலேத்துவிற்கு மூப்பர்களை வரவழைத்து கொடுத்த எச்சரிப்பு பற்றியெல்லாம் அறிந்தவர்கள் (அப். 20). ஆகவே, அவர்களின் பக்திச் செயல்பாடுகள் தேவன் மீதும், கிறிஸ்துவின் மீதும் கொண்ட தூய அன்பின் காரணமாக சிறப்பாக அமைந்திருந்தது. ஆனால், காலப்போக்கில் அந்த மெய் அன்பு தணிந்து சபைக் காரியங்கள் ***செய்யப்பட வேண்டுமென்பதற்காகச் செய்யப்பட்டு வந்துள்ளதை*** இயேசு கவனித்திருக்கிறார். ஆம், காரியங்கள் நடந்திருக்கிறது. ஆகவே தான் பாராட்டு, ஆனால், அவை பழக்கத்தினிமித்தம் நடக்கிறதா அல்லது அன்பினிமித்தம் நடக்கிறதா என்று கவனித்தால் ***அன்பு மறைந்து பழக்கமே மேலோங்கியிருந்துள்ளது***. ஆகவே தான், ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று கூறியுள்ளார்.

இப்படியாகச் சிறப்பாக இருந்த பல பழக்கங்கள் நாளடைவில் பாரம்பரியங்களாக மாறிப் போயிற்று. பாரம்பரியக் காரியங்கள் அது எதுவாக இருந்தாலும், எவ்வளவு விமரிசையாக அவை செய்யப்பட்டாலும், எத்தனை ஆயிரம் பேர் சேர்ந்து செய்தாலும் தேவன் அவைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார். அன்பே உருவான நம் தேவன், அவருக்கான நம் காரியங்களெல்லாம் ***அன்போடு செய்யப்பட*** வேண்டுமென்று தான் உபதேசித்துள்ளார் (1 கொரி 16:14).

***உண்மையான அன்பில்லாத வெற்று பக்திச் செயல்பாடுகளை தேவன் பாவமாகவே பார்க்கிறார்***. ஒருவேளை ஊரும், உலகமும் வேண்டுமானால் பாரம்பரியச் செயல்பாடுகளில் பெருமையடித்து ஆஹா, ஓஹோ என்று பீற்றிக் கொள்ளலாம். ஆனால், தேவப் பார்வையில் அன்பில்லாத செயல்பாடுகள் அனைத்தும் பாவமானவைகளே. ஆகவேதான், ***எபேசியரை மனந்திரும்பும்படியாக எச்சரித்துப் புத்தி சொல்கிறார்***. நாம் அவர்மீது இந்த மனந்திரும்புதல் என்னும் ஈவு நமக்குத் தேவனால் கொடுக்கப்பட்டிருக்காவிட்டால் ஒட்டுமொத்த உலகமும் நரகத்தை நோக்கிப் பயணம் செய்வதாகவே இருந்திருக்கும்.

மனந்திரும்புவதால் கிடைக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம் நாம் தேவனோடும், அவருடைய குமாரனாகிய இயேசுவோடும் மீண்டும் ஒப்புரவாக முடியும் என்பது. மனந்திரும்புவதற்கான வாய்ப்பு நாசியில் சுவாசம் இருக்குமட்டும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது. எபேசு சபையாருக்கான செய்தியும் அதுதான். மனந்திரும்பு, இல்லாவிட்டால் விளக்குத்தண்டு நீக்கப்படும், அதன்மூலம் நரகம் உன் வாழ்வின் முடிவாகும்.

ஆகவே, அருமையானவர்களே! நம்முடைய பக்திக் காரியங்களை நாம் தேவ வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து வசனத்துக்கு மாறானவைகைகள், கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிரானவைகள் கண்டுபிடிக்கப்படுமானால் அவவைகளிலிருந்து மனந்திரும்பி,

தேவனுடனான, கிறிஸ்துவுடனான நம் உறவை புதுப்பித்து விளக்குத்தண்டை தக்க வைத்துக் கொள்வோம்!

**III. எச்சரிப்பும், பலனும்**

எபேசு பட்டணத்துக் கிறிஸ்தவர்களை வெகுவாகப் பாராட்டி விட்டு, அவர்களிடத்தில் இருந்த குறையைச் சுட்டிக்காட்டின இயேசு, தான் இங்கே சொல்வது யாருக்கோ என்று எண்ணிவிட வேண்டாம், சபையில் உள்ள ஒவ்வொருவருக்கும் தான் என்ற தொனியில், ***ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று*** கூறுகிறார் (2:7) ஆவியானவர் ***நமக்கு என்ன சொல்லுகிறார்*** என்பதை நாம் கேட்காவிட்டால், நம் வாழ்வில் அவர் சித்தத்தை அறிந்து கொள்ளவோ, அதன்படி செய்யவோ முடியாது.

அடுத்ததாக, எபேசியர்களுக்குச் சொல்லப்படுவதைக் கவனமாக கவனிக்க வேண்டும். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய ***பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்*** என்றெழுதச் சொன்னார். இங்கே ஒரு கருத்தை ***மீண்டும்*** பதிவு செய்கிறேன். ஏழு சபைகளுக்கும் ஆவியானவர் அறிமுகமும், அவர்கள் ஜெயங்கொள்ளும் போது கிடைக்கும் பலனும் வித்தியாசமாக இருக்கும். எபேசு பட்டணத்தாருக்கு அவர்கள் ஜெயங்கொள்ளும் போது, பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றார்.

இப்படிச் செல்லப்பட்டதற்கு காரணம் இருக்கிறது. எபேசு பட்டணத்திலிருந்த பிரம்மாண்ட தியானாள் கோயிலின் முற்றத்தில் அந்நாட்களில் ***ஒரு பெரிய விருட்சம்***, அதாவது மரம் இருந்துள்ளது. அம்மரத்திற்கு ஒரு சக்தி இருப்பதாக கோயிலுக்கு வருபவர்களால் நம்பப்பட்டது. ஆகவே, அதைத் தொட்டுக் கும்பிடுவதும். பிள்ளைப்பேறு வேண்டி மரத்தைச் சுற்றி வருவதும், குணம் வேண்டி மரத்தடியில் படுத்திருப்பதும் வழக்கம். தியானாள் தேவதையை கிறிஸ்தவர்கள் வணங்காததால் இம்மரத்துப் பக்கம் போக வாய்ப்பில்லை. தியானாளைத்தான் கிறிஸ்தவர்களாகிய நாம் வணங்கக் கூடாது, ஆனால், ஏனைய எபேசுப் பட்டண வாசிகள் போல், மரத்துப் பக்கம் கூட நாம் போகக்கூடாதா, அதுகூடவா தவறு என்று எண்ணிய கொஞ்சம் பேர் அங்கிருந்துள்ளார்கள். சபை நடுவில் உலாவுகிற இயேசுவுக்கு இதுகூடவா தெரியாது! இச்சிந்தையை அவர் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்.

அடுத்து, தேவனுடைய ***பரதீசின் மத்தியிலிருக்கிற*** என்னும் சொற்றொடர். இந்த வார்த்தைப் பிரயோகத்திற்கும் ஒரு காரணம் இருந்திருக்கிறது. நான் நேரில்சென்று இதன் சரித்திர தகவல்களைச் சேகரித்த போது சில உண்மைகள் தெரிய வந்தது. அந்நாட்களிலிருந்து

ஆட்சியாளர்கள், தாங்கள் விரும்பியவர்களைக் கனப்படுத்த விரும்பும்போது அவர்களைத் தங்களுடைய ***அரண்மனைத் தோட்டத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு வரவழைத்து,*** அவர்களுக்கு விருந்துபச்சாரம் செய்து, வெகுமதிகள் கொடுத்து கனப்படுத்துவர்.

இதையெல்லாம் கவனிக்கும் கிறிஸ்தவர்கள், கோயிலுக்கும், மரத்தண்டையும் போக முடியது. இன்னும், ஆட்சியாளர்கள் கொடுக்கும் கனத்திலும் நாம் எவ்வளவு சிறப்பானவர்களாக வாழ்ந்தாலும் கிறிஸ்தவர்களாகிய நமக்கெல்லாம் ***ஒருபோதும் வாய்ப்பு கிட்டாது***. அந்தத் தோட்டத்துப் பக்கமெல்லாம் நாம் தலை வைத்துக்கூட படுக்க முடியாது என்ற எண்ண ஓட்டமும் இருந்துள்ளது. என்ன தான் கிறிஸ்துவுக்காக வாழ ஒருவன் தன்னை ஒப்புக் கொடுத்தாலும், சில பூமிக்குரிய நன்மைகள் மறுக்கப்படும் போது இப்படிப்பட்ட எண்ண ஓட்டத்தைத் தவிர்க்க முடிவதில்லை. எல்லாவற்றையும் கவனிக்கிற இயேசுவானவர் இவர்களின் இந்த எண்ண ஓட்டத்தையும் கவனித்துக் கொண்டார்.

ஆகவேதான், உங்கள் பக்தி வாழ்வில் நீங்கள் வெற்றி பெற்றால், ராஜாவின் தோட்டத்தில் உங்களுக்கு கிடைக்கும் கனத்தைக் காட்டிலும், ***தேவனுடைய பரதீசின் மத்தியில்*** கனம் கிடைக்குமென்றும், கோயிலுக்கு முன்பாக உள்ள மரத்தின் மாயையான அனுகூலங்களை நீங்கள் பெரிதாக நினைக்க வேண்டாம், ***நான் உங்களுக்கு ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்*** என்றும் கூறுகிறார். ***தேவனுடைய பரதீசு*** ராஜாவின் அரண்மனைத் தோட்டத்திற்கும், ***ஜீவ விருட்சத்திற்கும்,*** விக்கிரக கோயிலுக்கு முன்பாக இருக்கும் மரத்திற்கும் ஈடாகுமா? சொல்லுங்கள். ஆகவே, ஆகாது.

அருமையானவர்களே! இயேசு ஆண்டவர் எபேசியருடைய பக்திச் செயல்பாடுகளை எப்படியெல்லாம் கவனித்து, எப்படி எப்படியெல்லாம் அவர்களை ஊக்கப்படுத்துகிறார், வாக்குக் கொடுத்து பெலப்படுத்தி நம்பிக்கையூட்டுகிறார் என்பதை கவனிக்கும் போது நம் தேவனுக்குக் கோடான கோடி நன்றிகளை செலுத்தாமல் இருக்க முடியவில்லை. அந்த இயேசு ஒவ்வொரு உண்மையுள்ள புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவரிடத்திலும் எதிர்பார்ப்பது ஒன்று தான். அவர்கள் ! தங்கள் பக்தி வாழ்வில் செய்ய வேண்டியவைகளைச் செய்து, பரிசுத்தம் காத்து, இறுதிவரை நிலைத்திருந்து, ஜெயங்கொள்ள வேண்டுமென்பது. இயேசுவின் இந்த எதிர்பார்ப்பை நாம் பூர்த்தி செய்வோமானால், ***தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து என்றென்றும் அவரோடு கூட வாழும் பாக்கியம் பெறுவேம்!*** ஆமென்!! ஆமென்!!

பாடம் -1

# கிறிஸ்துவின் நற்செய்தி

**சகோ. சோட்**

புதிய ஏற்பாட்டில் நாம் கிறிஸ்துவின் நற்செய்தி குறித்து எண்ணற்ற முறை வாசிக்கிறோம். இதைக் குறித்து மற்றவர்கள் பேசுகிறதையும் நாம் கேட்கிறோம். நாம் சுவிசேஷத்தை வேறுபட்ட விதங்களில் குறிப்பிடுகிறோம். ஆனால், உண்மையில் நற்செய்தி என்றால் என்ன? கிறிஸ்துவின் நற்செய்தி என்றால் என்ன? இதற்கான பதிலுக்காக நாம் வேத வாக்கியங்களுக்குத் திரும்புவோம். பவுல் இவ்விதமாக எழுதுகிறார்: அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும், கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை, எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்.

ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப் படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே [ரோமர் 10:11-15].

அடிப்படையில் சுவிசேஷம் என்னும் பதம் நற்செய்தி, இரட்சிப்பு, வார்த்தை, வாக்குத்தத்தம், மற்றும் நம்பிக்கை போன்ற பொருள்களைக் கொடுக்கிறது. இவ்வார்த்தை கிறிஸ்துவின் நற்செய்தியைப் பொருத்தவரை மற்ற எல்லா செய்திகளிடமிருந்து வேறுபட்டதாயும், மேன்மையானதாயும் உள்ளது. இந்நற்செய்தி இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலை அடிப்படையாகக் கொண்டதாகும். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும் போது இவ்விதமாக எழுதுகிறார். ***அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப் படுவீர்கள். மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.***

*நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார்'* (1 கொரிந்தியர் 15:1–4). ஆனால், இது எப்படி நற்செய்தியாக இருக்க முடியும்? ஏனென்றால், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் மூலமாகத்தான் ஒருவர் இரட்சிக்கப்படுகிறார். அது மாத்திரமல்லாமல், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையையும் பெறுகிறார். பவுல் மறுபடியும் இவ்விதமாக எழுதுகிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன், முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப் படுகிறது. (ரோமர் 1:16,17).

நற்செய்தி என்பது நம் அன்றாட வாழ்வில் நமக்கு என்ன பொருள் கொடுக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாம் சில ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும்போது மிகவும் மகிழ்ச்சி அடைந்து அந்த நற்செய்தியை எல்லோருக்கும் அறிவிக்க விரும்புவோம். இது இயற்கையானது தான். இது கிறிஸ்து மூலமாக கிடைக்கும் இரட்சிப்பின் நற்செய்திக்கும் பொருந்துகிறதாக இருக்க வேண்டும். நாம் கர்த்தருக்குக் கீழ்படிந்து, அவருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருந்தால் நாம் இவ்வுலகத்திற்கு அதைக் குறித்து சொல்ல விரும்ப வேண்டும். அதனால் தான் நம் ஆண்டவர் இவ்விதமாகச் சொன்னார். பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று(மாற்கு 16:15,16).

வேத வாக்கியங்கள் தேவனுடைய நற்செய்தி குறித்துப் பேசுகின்றன. இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்பேஸ் தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத் திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல், ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர் களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது.

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. இயேசுகிறிஸ்துவைக் குறித்துத் தேவன் தம்முடைய*

*தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப்பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார். அவர் சகல ஜாதிகளையும், அவர்களுக்குள் இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும், தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப் பண்ணும்பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச் செய்திருக்கிறார். [ரோமர் 1:1-7].*

இதே விதமாகத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் பற்றிப் பேசுகிறார். ***ஆகிலும், அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் [அப். 20:24].*** இவ்வசனப் பகுதிகள் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமையைத் தான் காட்டுகின்றன. தேவனே தான் இவ்வுலகத்திற்கு சுவிசேஷத்தைக் கொடுக்க கிறிஸ்துவை அனுப் பினார். இவ்விதமாக சுவிசேஷமானது தேவனுடைய சுவிசேஷம் அல்லது கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

மறுபடியும் நாம் தேவனுடைய மகிமையான சுவிசேஷம் பற்றி வாசிக்கிறோம். ***'நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது [1 தீமோத்தேயு 1:11]. மேலும், நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். எங்கள் சுவிசேஷம் மறைபொருளா யிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளா யிருக்கும். 'தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமா யிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் . அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்' [2 கொரிந்தியர் 4:3,4].*** சுவிசேஷமானது மகிமையானது என்று சொல்லப்படுகிறது. அதன் பொருள், பரலோகத்துக்குரியது, நித்தியமானது என்பவையகளாகும். மேலும், சுவிசேஷமானது தேவனிடத்திலிருந்தும், கிறிஸ்துவினி டத்திலிருந்தும் வந்ததாகும்.

தொடரும்.....

†

பெண்கள் பகுதி

# காலங்களின் தேவன்

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகள் அனைவருக்கும் இந்த புதிய ஆண்டில் (2025) – தோத்திரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேவனுடைய வார்த்தைகள் நமக்கு எப்போதும் ஆறுதலையும், தேறுதலையும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. தேவனும், நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நமக்கு தேறுதலாகத் தந்தருளின அவருடைய வார்த்தைகள் அடங்கிய ***பரிசுத்த வேதாகமம்*** மிகச் சிறந்த ஈவாக நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

அன்பான தேவன் காலங்களின் தேவனாகவும் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, சாலமோன் மன்னரால் எழுதப்பட்ட பிரசங்கி 3ம் அதிகாரம் முதலாம் வசனத்தில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு என்று எழுதியிருக்கிறார் (பிரசங்கி 3:1). வேதாகமத்தையே மூன்று காலங்களாகப் பிரிக்கலாம். 1) முற்பிதாக்களின் காலம். 2) மோசேயின் காலம் அல்லது நியாயப்பிரமாணத்தின் காலம். 3) கிருபையாகிய இயேசுவின் காலம் அல்லது புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் காலம். இந்தக் காலங்களைப் பற்றிய தெளிவான புரிதல் அல்லது விளக்கம் இல்லாததால்தான் மக்கள் நேர் விரோதமாக காரியங்களைச் செய்து கொண்டுள்ளனர். கிறிஸ்தவம் செய்ய வேண்டியவைகளைச் செய்யாமலும், செய்ய வேண்டாதவைகளை செய்து கொண்டும் உள்ளது. தேவனின் செயல்பாடு காலங்களுக்கு காலம் மாறுபடுகிறது. ஆனால், தேவன் மாறாதவராகவே இருக்கிறார். அன்பான தேவன் முற்பிதாக்கள் காலத்தில் குடும்பத் தலைவர்களோடு நேருக்கு நேர் பேசினார். இரண்டாம் காலத்தில், மோசேயைக் கொண்டு நியாயப்பிரமாணத்தின் மூலம் பேசினார். மூன்றாம் காலத்தில், இயேசுவைக் கொண்டு வேத வசனத்தைக் கொண்டு மாத்திரம் பேசுகிறார். அருமையானவர்களே, இதை நாம் தெளிவாக புரிந்து கொண்டு தெரியாதவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, தாய்மார்கள் நம் பிள்ளைகளுக்குக் கற்றுத் தர வேண்டும்.

***பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாக நமக்குத் திருவளம்***

***பற்றினார்*** (எபி. 1:1). கடைசி காலம் என்பது இயேசு உயிரோடு எழுந்து சபையை ஸ்தாபித்ததிலிருந்து இயேசு மறுபடியும் வரப் போகிற காலம் வரையான காலம்.

அருமையானவர்களே, தேவனால் எதையும், எப்பவும் செய்ய முடியும். நம் காலத்தில் எதைச்செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரோ அதை மட்டும் நாம் செய்ய வேண்டும். தேவன் நல்லவர். உதாரணமாக, பல காரியங்களை வேதத்திலிருந்து நாம் சொல்ல முடியும். அவைகளில் ஓய்வு நாள், தசமபாகம், இசைக்கருவிகள், பண்டிகைகள், சிலை வழிபாடு இவைகளைப் பற்றிய சரியான புரிந்து கொள்ளுதல் நமக்கு அவசியம். வேதாகமத்தைத் தேடி வாசித்து பதிலை கண்டுபிடிக்க வேண்டும். அருமையானவர்களே, எந்த முயற்சியும், தேடுதலும் இல்லாமல் கிறிஸ்தவம் இல்லை. பெண்களாகிய நாம் தெளிவடைந்து, பின்பு நம் பிள்ளைகளுக்கு இவைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

நமது காலங்களின் தேவன், அன்பான தேவன். சிருஷ்டிப்பின் வரிசையிலேயே அவருடைய திட்டமிடுதலும், காலத்தின் அருமையும், பெருமையும் நமக்குத் தெரியும். ***பின்பு தேவன்: பகலுக்கும், இரவுக்கும். வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக் கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும், நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக் கடவது*** என்றார் (ஆதி. 1:14). மேலும், இஸ்ரவேல் ஜனங்களைப் பற்றி ஏசாயா தீர்க்கன் கூறும்போது 60:22-ல், ***சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்ற காலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.*** எனவே எழும்பி பிரகாசி என்று உற்சாகமூட்டும் வகையில் சொல்லுவார்.

மாற்கு 1:15-ல், ***காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்ஜியம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்*** என்றார். இங்கு காலம் நிறைவேறிற்று என்றால், இயேசு தேவ திட்டத்தின்படி ஊழியம் ஆரம்பிக்கும் காலம் வந்துவிட்டது என்பதை குறிக்கிறார். தேவன் குறித்த காலத்தை யாராலும் மாற்ற இயலாது. அவர் காலங்களின் தேவன். தாவீது அரசன் சங். 31:15-ல், ***என் காலங்கள் உமது கரத்தில் இருக்கிறது*** என்கிறார். சத்துருக்களின் கைக்கும், துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் தன்னை தப்புவிக்கிறதற்கு தேவன் வல்லவராயிருக்கிறார், அந்த காலம் அவர் கரத்திலிருக்கிறது என்பது தாவீதுக்கு தெரிந்திருந்தது. அது நமக்கும் தெரிந்திருப்பது அவசியம்.

இன்றைக்கு நம்மில் அநேகர் உயர்வையும், ஆசீர்வாதத்தையும் தேடி அங்கும், இங்கும் ஓடி அலைந்து கடைசியில் பொய்யான உபதேசத்திற்கு சென்று விசுவாசத்தை விட்டுத் தவறான பாதையில் சென்று விடுகிறோம். மாறாக, பொறுமையோடிருந்து அவருடைய சித்தம் நடக்கட்டும் என்று ஜெபத்துடன் இருக்க வேண்டும். ***ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்தை கைக்குள் அடங்கியிருங்கள்*** என்று 1 பேதுரு 5:6–ல் பேதுரு கூறுகிறார். காலங்களின் தேவன் எது, எப்போது, எப்படி என்பதையெல்லாம் அறிந்தவர்.

இறுதியாக, காலங்களின் தேவன் என்பதை மிக அழகாக, சிறப்பாக விவரிக்கிறது (கலா. 4:5). ***காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.*** இந்த வசனத்தை கவனமாக வாசிக்கும்போது, இந்தச் சங்கதிகளின் முழு கட்டுப்பாடும் தேவனிடத்தில் தான் இருந்தது. இவைகளின் ஒட்டுமொத்த பொருளையும் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கும், முழு அதிகாரத்திற்கும் சொந்தக்காரர் தேவன் மட்டுமே. யூதர்கள் தங்களை ஆள்வதற்கு மேசியா வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பல தீர்க்கதரிசிகள் இது குறித்து முன்னுரைத்தும் இருந்தனர். நாம் ஏற்கனவே பார்த்தபடி, இது இரண்டாம் காலமாகிய நியாயப்பிரமாணத்தின் காலம். இது முடிவுக்கு வந்து மூன்றாம் காலம் துவங்க வேண்டும். ***காலம் நிறைவேறின போது*** என்று சொல்லும் போது, அது கிறிஸ்துவுக்கு முன் இருந்த பழைய ஏற்பாட்டு சரித்திரம் முழுவதையும் உள்ளடக்கியதோடல்லாமல் கிறிஸ்து பிறப்பை மையப்படுத்தின ஒன்றாக இருக்கிறது. இயேசுவின் பிறப்பு தான் சரித்திரத்தின் திருப்புமுனை. பழைய உலகம் முடிந்து, புதிய உலகம் ஆரம்பமாகிறது. இயேசு தாமே பிரசங்கிக்க ஆரம்பிக்கும் முன்பு இப்படிச் சொல்கிறார். ***காலம் நிறைவேறிற்று; தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று*** (மாற்று 1:15). முழுக்க, முழுக்க தேவனின் காலத்தில், தேவன் குறித்த நாட்டில், இடத்தில், நேரத்தில் இது நடந்தேறியது. ***தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்*** என்றால், கட்டாயமாக அவர் பெத்லகேமில் பிறப்பதற்கு முன், தன் தகப்பனோடு பரலோக மகிமை நிறைந்தவராய் இருந்தார். ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர் என்பது அவர் மனுக்குலத்தின் மேல் பரிதாபங்கொண்டு மனுக்குலத்தின் கஷ்டம், நஷ்டம், இன்பம், துன்பம் இவை யாவும் அனுபவிக்க தேவகுமாரன், மனுஷ குமாரனானார்.

ஆக, அருமையானவர்களே தேவன் எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகச் செய்கிறவர், தன் திட்டங்களையும்,

காலத்தின் மாறுதல்களையும் உண்டாக்க ஒரு ஸ்திரீயைத் தெரிந்து கொண்டார். ஸ்திரீகள்மேல் தேவனுக்கு இருக்கும் நோக்கத்தையும், அன்பையும், பொறுப்பையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உங்களையும், என்னையும் கொண்டு தேவன் தன் திட்டங்களை, ஏற்ற காலங்களில் செயல்படுத்த நாம் அவருக்கு உறுதுணையாய் இருப்போம். நன்றியாய் இருப்போம். அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வாராக! ஆமென்!!

†

## வீட்டார் அனைவரும்...

1. கிறிபுதுவின் வீட்டார் அனைவரும் விசுவாசம் வைத்தார்கள். - அப்.18:8

2. நோவாவின் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசித்தார்கள். - ஆதி.7:1

3. எல்கானா வீட்டார் அனைவரும் ஆலயத்திற்குப் போனார்கள். - 1சாமு.1:21

4. ஓபேத் ஏதோம் வீட்டார் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். - 2 சாமு 6:11

5. கொர்நெலியு வீட்டார் அனைவரும் தேவனுக்கு பயந்தவர்களாக இருந்தார்கள். - அப் 10:2

6. சிறைச்சாலைக்காரன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்பட்டார்கள். - அப்.16:31-34

7. யோசுவா வீட்டார் அனைவரும் கர்த்தரையே சேவித்தார்கள். - யோசு.24:15

(சகோ. தீமோன் ஸ்ரீதர் - சென்னை)

வாலிபர் பகுதி

# கிரியை உள்ளவர்களாய் இருப்போம்!

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே, அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! வருடத்தை நன்மையினால் முடிசூட்டும் தேவன் இந்த ஆண்டை உங்களுக்கு சகல காரியங்களிலும் நன்மையாக இருக்க செய்யவேண்டுமென்றும் கிறிஸ்துவுக்குள் சரீரத்திலும் ஆவியிலும் நாம் தேற வேண்டுமென்று வாஞ்சிக்கிறேன். சரி, தேவன் மனிதனைப் படைத்தபோது நமது சாயலாக உண்டாக்குவோம் என்று சொன்னதை நாம் அறிவோம். தேவனால் படைக்கப்பட்ட அனைத்திலும் மனிதன் மட்டுமே தேவ சாயலில் படைக்கப்பட்டான். எப்படி தேவன் நித்தியமானவரோ அதைப்போல நம்மில் உள்ள ஆவியும் நித்தியமானது தான். எப்படி தேவன் ஞானம் உள்ளவரோ, அவருடைய சிருஷ்டிப்பாகிய நாமும் ஞானம் உள்ளவர்களாக இருக்கிறோம். தேவ சாயலில் படைக்கப்பட்ட நாம் பாவத்தினாலே உருமாறியவர்களாக மாறிவிட்டோம். இந்த நிலைமையில் இருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்கும்படியாக தேவன் தமது ஒரே பேரான குமாரனை இந்த பூமிக்கு அனுப்பி நம்மை மீண்டும் அவருடைய சாயலை தரிப்பிக்கச் செய்தார். அப்படியானால் மனுக்குலத்திற்கு தேவனுடைய திட்டம் நாம் அவருடைய சாயலை உடையவர்களாக இப்பூமியிலே வாழ வேண்டும் என்பது.

அதை எப்படிச் செய்வது? அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் என்று இயேசு கிறிஸ்துவைக் குறித்து கொலோசெயர் 1:15 வாசிக்கிறோம். தேவ சாயலாக நாம் மாற வேண்டுமானால் நாம் கிறிஸ்துவைப் போல ஆக வேண்டும். கிறிஸ்துவைப் போல் ஆக வேண்டும் என்றால் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்த ஒரு வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். அன்றாட வாழ்க்கையின் செயல்பாடுகளில், நாம் எடுக்கும் முடிவுகளில், சரியான காரியங்களைச் செய்வதின் மூலம் நாம் கிறிஸ்துவை உடையவர்களாக இருக்கிறோம் என்பதை காண்பிக்க முடியும். அவருடைய சாயலை நாம் தரித்து வாழ பரிசுத்த ஆவியை தேவன் நமக்காகத் தந்திருக்கிறார். அவருடைய உதவியோடு நாம் மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபம் அடைகிறவர்களாக இருக்க வேண்டும் என்று 2 கொரிந்தியர் 3: 18 இல் வாசிக்கிறோம். நம்முடைய முயற்சி மூலமாகவோ. நம்முடைய நீதியின் மூலமாகவோ

நாம் கிறிஸ்துவைப் போல் வாழ முடியாது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் என்று பிலிப்பியர் 2:13 ல் வாசிக்கிறோம்.

பரிசுத்த ஆவியானவர் நம்மில் கிரியை செய்ய வேண்டுமென்றால், நாம் விசுவாசத்தோடு சில காரியங்களை நம்முடைய பங்காகச் செய்ய வேண்டும். வேதத்தில் இடம் பெற்றுள்ள தேவ மனிதர்களின் வாழ்க்கையை நாம் பார்க்கும் பொழுது, தேவன் மீது விசுவாசம் வைத்தது மட்டும் அல்லாமல், அவர்கள் கிரியை செய்தசபடியினாலே தான் தேவன் அவர்களுக்கு உதவினார் என்று கவனிக்க முடியும். அப்படியானால், முதலில் நாம் கிரியை செய்ய வேண்டுமென்பது தேவனுடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. பாவத்திலிருந்து நாம் விடுபடும் இரட்சிப்பானது நம்முடைய கிரியைகளினாலே உண்டாவதில்லை. ஆனால், பெற்றுக்கொண்ட இரட்சிப்பு நிறைவேறுவது முழுக்க முழுக்க நம்முடைய கிரியைகள் மற்றும் முயற்சிகளினாலேயே கிறிஸ்துவைப் போல் மாற வேண்டும் என்பது ஒரு நாளில் முடியக்கூடிய ஒரு காரியமல்ல. நம்முடைய வாழ்நாள் முடியும் வரை நாம் அதற்காக முயற்சித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் உபதேசங்களைக் கடைபிடிப்பதன் மூலம் தேவ சாயலை நீங்கள் தரித்து அதன் மூலம் நம் வாழ்விற்கான தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற இந்தப் புதிய ஆண்டிலே முயற்சிப்போம். நமக்கு உதவியாக இருக்கும்படி பரிசுத்த ஆவியின் மூலம் கொடுக்கப்பட்ட வேதத்தை நம் பாதைகளுக்கு வெளிச்சமாக்கிக் கொள்வோம். விசுவாசம் மட்டுமல்ல, கிரியைகளை நம்மைச் சுற்றியுள்ள உலகிற்கு காண்பிக்கிற வாலிபர்களாக நாம் இருக்க வேண்டும். அப்படித் தீர்மானத்தோடு செயல்பட தேவன் நமக்கு உதவி செய்வாராக!

## நாம் அல்ல, தேவனே

(சகோ. சம்மா – திருப்பத்தூர்)

1. **நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்.**
   *சங்கீதம் 100: 33*

2. **நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.**
   *கலாத்தியர் 2:20*

3. **நீங்கள் அல்ல, ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.**
   *மத்தேயு 10:20*

4. **நான் அல்ல, தேவனே உத்தரவு அருளிச்செய்வார்.**
   *ஆதியாகமம் 41:16*

5. **நான் அல்ல தேவகிருபையே பிரயாசப்பட செய்தது.**
   *1 கொரிந்தியர் 15:10*

சிறுவர் பகுதி



# தேவமனிதன் – 8

Dr. *பிரெய்ஸி*

**ஹெ**லோ குழந்தைகளே ! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த மாதம் தேவ மனிதர் ***நெகேமியா*** பற்றிப் பார்ப்போம்.

அன்புள்ள குழந்தைகளே! நெகேமியா 1 ஆம் அதிகாரத்தில் யூதாவிலிருந்து வந்தவர்களிடத்தில் நெகேமியா ***பாபிலோனிய சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தார்*** என்று பார்க்கிறோம். நெகேமியா ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாய் ஒரு நல்ல நிலையில் இருந்தார். ஆயினும், அவர் தனது மக்களைப் பற்றி அக்கறை கொண்டிருந்தார்.அவர் தனது சகோதரர்கள் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் இல்லை என்று ***கேள்விப்பட்டபோது*** அவர் அவர்களைப் பற்றி கவலைப்பட்டார். நெகேமியா அழுது, சிலநாளாய்த் துக்கித்து, ***உபவாசித்து, மன்றாடி*** பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தார்.

அத்தியாயம் 2 இல், நெகேமியா எருசலேமினிமித்தம் மிகவும் வருத்தமாயிருந்தார் என்று வாசிக்கிறோம். அவர் ஏன் சோகமாக இருக்கிறார் என்று ராஜா அவரிடம் கேட்டார். நெகேமியா ராஜாவிடம் பேசுவதற்கு முன், ***தேவனிடத்தில்*** ஜெபித்து, ராஜாவிடம், யூத ஜனங்கள் வசிக்கும் இடத்தின் மதில்களைக் கட்டுவதற்கு அவர் தனது மக்களுக்கு உதவ முடியுமா என்று கேட்டார். பின்னர் ராஜாவின் அனுமதியின் பேரில் நெகேமியா தனது மக்களிடம் செல்ல அனுமதிக்கப்பட்டார். நெகேமியாவின் ஜெபம் கேட்கப்பட்டது.

அன்புள்ள குழந்தைகளே! நாம் அனைவரும் நெகேமியாவைப் போல இருக்க வேண்டும். அவர் தனது வாழ்க்கையில் உயர் பதவியில் இருந்தாலும், அவரது இதயம் ***தேவனின் மக்களுக்காக*** இரக்கத்தால் நிறைந்திருந்தது. அவர்களின் நலனுக்காக ஜெபித்தார். அவர் அவர்களுக்காக ஜெபித்தது மட்டுமல்ல, தேவ மக்களுக்காக அவர் தனது ஆடம்பர வாழ்க்கையை விட்டுச் செல்லத் தயாராக இருந்தார். அன்பான குழந்தைகளே, நாமும் கிறிஸ்துவில் உள்ள நம் சகோதர, சகோதரிகளை நேசிப்போம், அவர்களின் நலனுக்காக ஜெபிப்போம், செயல்படுவோம்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.** †

# நாம் நீதிமான்களாயிருக்கிறோம்.

**சகோ. K.M. பிலிப் - பவானி**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! உங்கள் யாவருக்கும் மீட்பர் இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ***நீதிமான் பனையைப் போல செழித்து வளருவான்*** என்று சத்திய வேதம் நம்மை வாழ்த்துகிறது [சங் 92:12] இந்த வாழ்த்துதலை நீதிமான்களாகிய நம் வாழ்க்கையில், ***வருடத்தை நன்மையால் முடிசூட்டுகிற*** தேவன் நிச்சயம் நிறைவேற்றுவார். ஆம் நாம் நீதிமான்கள் என்று நாம் ஆராதிக்கிற நீதிபரராகிய பிதாவாகிய தேவனும் [யோவான் 17:25] நீதியுள்ளவராகிய குமாரனாகிய கிறிஸ்துவும் [ 1 யோவான் 2:1 ] அழைக்கிறார்கள். இந்த ஆசீர்வாதமான வார்த்தை மெய்யாகவே நம்மை சந்தோஷப்படுத்துகிறது. ***தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரே அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களுமாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கி யிருக்கிறாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்***[ரோமர் 8:29,30].

அற்பர்களும், பாவிகளும் நீசர்களுமாகிய நம்மை, ***இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்*** என்று வேதம் திட்டமும், தெளிவுமாய் வெளிப்படுத்துகிறது [ரோமர் 3:24 ] கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் மீட்கப்பட்ட, இரட்சிக்கப்பட்ட ***நாம் நீதிமான்கள்; நீதியின் மார்க்கத்தை நாம் பின்பற்றுவதால் நாம் நீதிமான்கள் [2பேதுரு 2:21] எல்லாவற்றிற்குமேலாக, தேவனே நம்மை நீதிமான்களாக்கியிருக்கிறார் [ரோமர் 8:33 ]*** எவ்வளவோ பிரச்சனைகளுள்ள கொரிந்து பட்டணத்து சபையாரை பவுல் ***பரிசுத்தவான்கள்*** என்று அழைக்கிறார். காரணம், பரிசுத்தம் என்பது தொடர் பயிற்சியாகும். பள்ளியில் புதிதாய் முதல் வகுப்பில் சேருகிறவனும் மாணவன் தான். கல்லூரியில் இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளும் மாணவர்கள் தான். இதில் நாம் அறிந்து கொள்ள வேண்டியது முதல் வகுப்பில் இருந்து, பட்டம் பெறும் வரை தொடர்ந்து தன் தகுதியை அதிகரித்துக் கொண்டு சென்றால் மட்டுமே, அந்த மாணவன் பட்டம் பெற்று இலட்சியத்தை அடைய முடியும். அதுபோலவே ஞானஸ்நானம் பெற்ற அனைவருமே பரிசுத்தவான்களும், நீதிமான்களுமாயிருக்கிறோம். அதேசமயம் இந்தத் தகுதியைத் தக்கவைத்துக்கொள்ள விசுவாசத்தில் இறுதிவரை

உறுதியாய் நிலைத்திருந்தால் ***ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவானும், நீதிமானுமாயிருக்கிறவனுக்கு ஜீவகிரீடம் சூட்டப்படும்*** [வெளி 2:10].

அன்று ஒருவன் ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டானென்றால் இன்றும் அப்படியே. அன்று சபையார் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்பட்டார்களென்றால் இன்றும் அப்படியே. அன்று புறஜாதியாரும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டார்களென்றால் இன்றும் தேவகிருபை நம்மையும் நீதிமான்களாக்கியிருக்கிறது [கலா 3:8] இவ்விதமாய் தேவன் தம்முடைய பிள்ளைகளாகிய நம்மை [யோவான் 1:12 பெருமைப்படுத்துகிறார்.

பிரியமானவர்களே! பாவம் செய்கிறவன் பாவி, நீதிசெய்கிறவர் நீதிமான் என்பது சரிதானே. கீழ்கண்ட ஜீவனுள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள்.

1. வசனத்தைக் கேட்டு ஞானஸ்நானம் எடுப்பதென்பது தேவ நீதியாகும். இதைத்தான் இயேசு ஞானஸ்நானம் பெறும்பொழுது ***இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்*** [மத் 3:15]

2. நீதியுள்ள வசனத்தின் மீது பசிதாகம் கொண்டவர்களாய் வீடுகளில், தனிமையில் வேதம் வாசிப்பதும், சபை கூடி தேவ ஆலோசனை கேட்பதில் ஆர்வம் காட்டுவதும், ***நீதியின் மேல் பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்*** என்பதை சுட்டிக்காட்டுகிறது [மத்தேயு 5:6].

3. நம் வாழ்க்கையில் வேதம் வாசிக்க, கேட்க, ஜெபிக்க, ஊழியம் செய்ய நேரத்தைக் கொடுக்கிறோம். மேலும், மனப்பூர்வமாய் காணிக்கை கொடுக்கிறோம். ஏழை, எளியவர்களுக்கு இயன்றதைக் கொடுக்கிறோம். இதுகுறித்து, ***வாரியிறைத்தான்; ஏழைகளுக்குக் கொடுத்தான் அவன் நீதி என்றென்றைக்கும் நிற்கும்*** என்று வேதம் குறிப்பிடுகிறது [2 கொரி 9:9]

4. நாம் பின்பற்றும் மார்க்கம் நீதியின் மார்க்கம் [2பேதுரு 2:21]

5. நாம் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதியின் சேனையை எதிர்த்து நிற்கும்படியாய் சர்வாயுத வர்க்கத்தின் ***நீதி என்னும் மார்க்கவசத்தைத் தரித்திருக்கிறோம்*** [எபே 6:14].

6. ராஜ்ஜியமாகிய சபையில் இருப்பவர்களை நீதிமான்கள் என்று இயேசு சொல்கிறார் [மத் 13:43].

7. விசுவாசிகள் எல்லோரும் நீதிமான்களே [ரோமர் 3:28].

மேற்கண்ட தேவ வார்த்தைகள், நாம் நீதிமான்கள் என்ற பட்டத்திற்கு தகுதியுள்ளவர்களே. தொடர்ந்து தேவ நீதியை நிறைவேற்றி கிறிஸ்துவின் வருகைமட்டும் நீதிமான்களாய் நிலைத்திருப்போம்.

நீதிமானுக்கு தேவன் கொடுக்கும் தைரியம், ***நீதிமான் ஏழு தரம் விழுந்தாலும் எழுந்திருப்பான்*** [நீதி 24:16] காரணம், நீதிமானுக்கு தன்னைத்தானே நிதானித்துப் பார்க்கும் சிறப்புப்பண்புண்டு. தேவனுடைய இருதயத்திற்கேற்ற நீதிமான் தாவீது, உரியாவின் மனைவி பத்சேபா மூலம் செய்த பாவங்கள், ***கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாததாயிருந்தது***. தேவன் நாத்தான்வேலைக்கொண்டு உணர்த்தினார். இஸ்ரவேலர்களுக்கே ராஜாவாயிருந்தபோதும், தாவீது மேட்டிமை கொள்ளாமல் தான் செய்த அநீதியான பாவங்களை உணர்ந்து, நிதானித்துப் பார்த்து உடனே தேவனுக்கு முன் தன்னைத் தாழ்த்தி, ***என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன் என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாய் பாவம் செய்தேன், நீர் என்னை ஈசோப்பினால் கழுவி சுத்திகரியும்*** என்று முற்றிலும் தாழ்த்தி ஒப்புக்கொடுத்தான். ***நீதிமானின் ஜெபத்தை கேட்கிற தேவன் தாவீதை மன்னித்து தொடர்ந்து நீதிமானாய் வாழச் செய்தார்*** [2சாமு 11,12 ஆதி] நீதிமான் பேதுரு தான் விழுந்து போனதைக் குறித்து நிதானித்தான், மனங்கசந்து அழுதான். இயேசு அந்நீதிமானை சபைக்குத் தூணாக, திறவுகோலாக மாற்றினார்.

பிரியமானவர்களே! தேவனாலேயே ***நீதிமான்*** என்று சாட்சி பகிரப்பட்ட யோபுவுக்கு வந்த துன்பங்கள், வெட்கம், இழப்புகள் எவ்வளவு கொடுமையானது என்பதை [யோபு 1,2] அதிகாரங்களில் பார்க்கின்றோம். இவை யோபுவின் பாவத்தால் மீறுதலால் அல்ல, வஞ்சகன் சாத்தானால் வந்தது. நீதிமான் யோபு பனையைப்போல செழிப்புடன், எதிரிகள் பார்த்து பொறாமைப்படும் நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர். இப்பொழுது எல்லாவற்றையும் இழந்தவராய் தனித்து விடப்பட்டார். ஆனாலும், நீதிமான் யோபுவின் இருதயத்தை தேவன் பலப்படுத்தினார். தன் மோசமான நிலை குறித்து தடுமாறாமல், துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமல் தன் நிலை குறித்து திட நம்பிக்கையிருந்தது. ***நான் நீதிமான்*** [ரோமர் 9:15 ] ***அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் அவர் என்னை சோதித்த பின் பொன்னாக விளங்குவேன்*** என்று மிகத் தெளிவாய், நிதானமாய் தன் நீதியான வாழ்க்கை குறித்து திருப்தியாயிருந்தார். இதுதான் நீதிமானின் விசுவாசம் [23:10 ] நீதிமான் தன்னைத்தானே நிதானித்து நிலை நிற்பான் என்பதற்கு யோபுவை தேவன் நமக்கு முன் நிறுத்துகிறார். அன்பானவர்களே! நீதிமான்

விழுந்தாலும் எழுந்து சூரியனைப் போல பிரகாசிப்பான். தேவன் யோபுவை இரட்டிப்பான ஆசீர்வாதத்தால் கனப்படுத்தினார். இன்னும் நீதிமான் யோபு நமக்கு முன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

பிரியமானவர்களே! மாணவனுக்குத் தான் பரீட்சை. பரீட்சை தான் அவனுக்கு பட்டத்தை முடிசூட்டும். நாம் நீதிமான்கள். ***மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக உள்ள புதிய மனிதனை தரித்துக் கொண்டிருக்கிறோம் [எபே. 4:24] நீதியைத் தரித்துக் கொண்டேன். அது என் உடுப்பாய் இருந்தது. என் நீதியை நான் கெட்டியாய் பிடித்திருக்கிறேன்*** என்று நீதிமான் யோபுவைப் போல் உறுதியாய் சொல்வோம்; செயல்படுவோம் [யோபு 29:14, 27:6]அதுதான் கறை திரை அற்ற மனசாட்சியை உருவாக்கும். புறஜாதியாருக்கு முன் நீதிமான்களாய் வாழ்ந்து காட்டுவோம். அவர்களும் ***கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டு நீதிமான்களாகட்டும் [ரோ 5:7-9]. இது முதல் நீதியின் கிரீடம் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே நமக்கு சூட்டுவார் [II தீமோ 4:8].*** பூமியில் வாழும் நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன் [ 112:6 ] ஆமென்! †

## நம்முடைய இருதயம் எப்படிப்பட்டது?

| | |
|---|---|
| 1. நொறுங்குண்டதா? | [சங். 34:18; சங். 51:17; சங். 69:20] |
| 2. நருங்குண்டதா? | [சங். 51:17] |
| 3. மனம் கசந்ததா? | [ஆதி. 6:6; சங் 73:21] |
| 4. மனப்பூர்வமானதா? | [யாத். 25:2; யாத். 35:5,29] |
| 5. திடனற்றுப்போனதா? | [எண். 32:7-9; உபா. 1:28] |
| 6. கடினமானதா? | [உபா. 2:30] |
| 7. பெருமையானதா? | [உபா. 8:14; சங். 101:5; எசே. 28:5,17] |
| 8. பொல்லாததா? | [உபா. 15:9; நீதி. 6:14,18; எரே. 4:14-18] |
| 9. தத்தளிக்கிறதா? | [உபா. 28:65; ஏசா. 66:2] |
| 10. உத்தமமானதா? | [1இராஜா. 8:61; 1நாளா. 29:9] |
| 11. வஞ்சனையானதா? | [1நாளா. 12:33; யாக். 4:8] |
| 12. இளகியதா? | [2இராஜா. 22:19; 2நாளா. 34:27; எபே. 4:32] |

[சகோ. சம்மா - திருப்பத்தூர்]

# ஒன்று இல்லாமல் மற்றது இல்லை

Bro. பாண்டியன்

**தே**வனுடைய பிள்ளைகளுக்கு திருமறை ஆசான் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்கள்! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக! பொதுவாக, வேத வசனங்கள் ***ஜோடில்லாமல் இராது*** என்பதை நாம் அறிவோம் (ஏசா 34:16). சிருஷ்டிப்பிலும் உயிரினங்கள் அனைத்தும் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்டது. ஆகிலும், (மனுஷரில்) கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை என்கிறார் பவுல். கிறிஸ்தவ வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியதும், சில சத்தியங்கள் ஒன்று இல்லாமல் மற்றது இல்லை என்கிறதான சில காரியங்களை இங்கு காண்போம்.

முதலாவது, இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை! (எபி 9:22). மோசேயின் காலத்தில் ஜனங்கள் செய்த பாவத்திற்காக மிருக பலி செலுத்தும் சட்டம் இருந்தது (லேவி 17:11). மாம்சத்தின் உயிர் ரத்தத்தில் இருக்கிறது என்கிற பெரிய உண்மை வேதத்தின் மூலமாகவே தெரிய வருகிறது. அதனால் தான், பழைய ஏற்பாட்டில் மட்டுமல்ல புதிய ஏற்பாட்டின் காலத்திலும் இரத்தம் புசிக்கக் கூடாது என்கிற சட்டம் உள்ளது (அப் 15:20). காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய முடியாததால் இந்த மனுக்குலம் அனைவருடைய பாவங்களுக்காகவும் இயேசுக்கிறிஸ்துவின் விலையேறப்பட்ட ரத்தம் சிந்தப்பட்டது ( 1 யோவா 1:7). அதனால் நாமும் இரட்சிக்கும்படிக்கு இயேசுவின் நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்று பார்க்கிறோம்.

இரண்டாவதாக, மனந்திரும்புதல் இல்லாமல் பாவமன்னிப்பின் ***சந்தோஷம்*** இல்லை என்கிறார் இயேசு (லூக் 15:10). நற்செய்தியைக் கேட்டு மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். மனந்திரும்பாமல் போனால் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்றும், அவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடைவார்கள் என்றும் வேதம் எச்சரிக்கின்றது ( லூக்கா 13: 4,5 ). மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றவர்களையே தேவன் சபையில் சேர்த்துக் கொள்கிறார். அப்படி ஞானஸ்நானம் பெற்ற மந்திரி தனக்கு போதித்த பிலிப்புவைக் காணாவிட்டாலும் பாவம்

மன்னிக்கப்பட்ட சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (அப்8:39). அதேவேளையில் நாம் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளை செய்யப் புத்தி சொல்கிறார் பவுல் ( அப் 26:20 ).

மூன்றாவதாக, விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருக்க முடியாது என்பதே ( எபி 11:6). விசுவாசமில்லாத இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சூழ்நிலை குறித்து முறுமுறுத்து தேவனைக் கோபப்படுத்தினார்கள். நாம் அப்படி செய்யாதபடி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நாளைய தினக் கவலைகளை அகற்றி நாம் நம் வாழ்வில் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும் போது நம் தேவைகள் சந்திக்கப்படும் என்பதே ஆண்டவர் நமக்குக் கொடுத்த வாக்குறுதி! நாம் வேதத்தையும், தேவனையும் அறிந்து கொள்ளும் போது நம் விசுவாசம் பெருகும். தேவன் நமக்கு செழிப்பைக் கட்டளையிடுவார் ( 2 நாளா 17 : 3–5 ).

நான்காவதாக, சிட்சையில்லாமல் நமக்கு தேவனுடைய (தகப்பன்) உறவு இல்லை ( எபி 12:7 ). நாம் நல்லொழுக்கத்தில் வளர ஒரு தகப்பனைப் போல தேவன் நம்மை சிட்சிக்கிறார் என்பதை நாம் அறிய வேண்டும் ( உபா 8: 2,3 ). அதன் மூலம் நாம் இன்னும் தேவனுடைய வார்த்தைகளை அறிந்து பின்பற்றவே அது உதவுகிறது. அது மாத்திரமல்ல, சிட்சைகளே தேவனை அறிந்து கொள்ளவும் செய்கிறது. தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறு பிள்ளை ஏதாகிலும் பிரச்சினை அல்லது ஆபத்து எனும்போது பெற்றோரைத் தேடி ஓடுவது போலத்தான் நாமும் தேவனை அண்டிக்கொள்கிறோம்.

ஐந்தாவதாக, சிலுவை இல்லாமல் ஆண்டவரை நாம் பின்பற்ற முடியாது ( மத் 10:38 ). இங்கு சிலுவை என்பது துன்பம் பாடுகளைக் குறிக்கும். பெரும்பாலும் பொருளாதாரக் குறைவுகளே நிறைய பாடுகளுக்குக் காரணமாகிறது. மறுபுறம் மக்கள் பொருளாசையில் தேவனை அசட்டை செய்கிறார்கள். ஒரு முறை இயேசுவிடம் வந்த ஐசுவரிய வாலிபன் இயேசுவைப் பின்பற்ற முடியாமல் போனான் (மாற் 10:21). ஆனால், நம் சுய விருப்பங்களை வெறுத்து இயேசுவைப் பின்பற்ற வேண்டும். சென்ற நவம்பர் மாத இதழில் கூட சிலுவை குறித்து திருமறை ஆசான் ஆசிரியர் விரிவாக கூறியிருந்தார்.

ஆறாவதாக, பரிசுத்தம் இல்லாமல் தேவனைத் தரிசிப்பது கூடாத காரியம் ( எபி 12:14 ). ஞானஸ்நானத்தில் பாவங்கள் மன்னிக்கப்பட்டு பரிசுத்தமாகுதலை பெற்ற நாம் தொடர்ந்து அதை தெய்வ பயத்தோடே தொடர வேண்டும் ( 2 கொரி 7:1 ). அநேகர்

அதைச் செய்வதில்லை. விசுவாசத்தில் குறைவுள்ள மற்றவர்களைப் பார்த்து வீணாகிப் போகிறார்கள். ஆனால், சபை கூடுதலின் முக்கிய நோக்கமே நாம் நம்மை ஆராய்ந்து சரிபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதே . சிட்சையின் நோக்கமும் பரிசுத்தமாகுதலே (எபி 12:10). பரிசுத்தமுள்ளவர்கள் இன்னும் பரிசுத்தமாக வேண்டும் (வெளி 22:11 ).

இறுதியாக, இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது (மத் 6:24). தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஒரே விதமாக முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. அப்படி யாராவது இருந்தால் அதுவே பக்தியின் வேஷம் என்பதை அறியுங்கள் ( 2 தீமோ 3:5). உலகக் கவலை நம் விசுவாசத்தைக் குறையச் செய்யும். எதிர்கால பயங்களை உருவாக்கும். மாறாக, மேலும் நம் தேவனை விட்டுப் பிரியும் ஆவிக்குரிய மரணத்தை உண்டாக்கும் ( 2 கொரி 7:10). நமக்கு இருக்கிறவைகள் போதும் என்று எண்ணும்போது நம் தேவன் நம்மைக் கைவிடாமலும், நம்மை விட்டு விலகாமலும் இருப்பார் என்று வாக்கு பண்ணியிருக்கிறார். சபைக்கூடுதலை விட்டு வெளியே ஆசீர்வாதங்களை எங்கு தேடினாலும் கிடைக்காது ( எபி 12: 16,17). தேவ சமாதானம் நம் இருதயங்களை ஆளக்கடவது! ஆமென்.

✝

## தைரியம்

1. அவரில் நிலைத்திருப்பதால் தைரியம். – 1 யோவா 2 : 28

2. அவரைப் பற்றும் விசுவாசத்தால் தைரியம். – எபே 3 : 12

3. அன்பு நம்மிடத்தில் பூரணபடுகிறபோது தைரியம். – 1 யோவா 4 : 17

4. இயேசுவின் இரத்தத்தால் தைரியம். – எபி 10 : 20

5. இருதயம் குற்றமற்றதாக இருக்கும்போது தைரியம். – 1யோவா 3 : 21

6. சகோதரர்களைப் பார்க்கும்போது தைரியம். – அப் 28 : 15

7. தேவனை ஸ்தோத்திரிப்பதால் தைரியம். – அப் 28 : 15

8. ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் போது தைரியம். – சங் 138 : 3

(சகோ. சம்மா – திருப்பத்தூர்)

# எபிரெயர் 2 ஆம் அதிகாரம்

**Bro. V. ஆசீர்வாதம்,** சென்னை.

## இயேசுவானவர் நமக்காக என்ன செய்தார்?

**எபி 2:1 ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.**

2:1 இந்த கடைசி நாட்களில் தேவன் தமது குமாரன் மூலமாக நம்மோடு பேசுகிறார். அந்த குமாரன் எவ்வளவு பெரியவராயிருக்கிறார் என்பதை நாம் பார்த்தோம். அவ்வளவு பெரியவர் நம்மோடு பேசும் போது, நாம் அதை எந்த அளவுக்கு ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும் என்பதை இந்த வசனம் நமக்கு உணர்த்துகிறது.

**2:2 ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க,**

2–2 தேவ தூதர்கள் மூலமாய் நியாயப்பிரமாணம் கொடுக்கப் பட்டது (அப். 7:53, கலாத். 3:19). இந்த நியாயப்பிரமாணத்திற்கு ஒருவன் கீழ்ப்படியாமல் போனால் அல்லது பிரமாணத்தை மீறினால் அவனுக்கு தண்டனை அல்லது மரணம் உறுதியாக்கப்பட்டது. உதாரணமாக: எண். 15:32–36 வரைக்கும் வாசிக்கும்போது ஓய்வு நாளில் ஒருவன் விறகுகளைப் பொறுக்கினான். ஓய்ந்திருக்க வேண்டியவன் அதை மீறினபடியால், அவன் கல்லெறிந்துக் கொல்லப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. அவன் மனந்திரும்பினாலும், கண்ணீர் விட்டு கதறி அழுதாலும் அதை கவனிப்பதற்கு வாய்ப்பேயில்லை. தண்டனை ஒன்றே அதற்கு முடிவாகும். எபி. 10:28ன்படி, மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல், இரண்டு மூன்று சாட்சிகளின் நிமித்தம் கொலை செய்யப்படுகிறான்.

மேலும், இஸ்ரவேல் ஜனங்கள் எரிகோ பட்டணத்தைப் பிடிக்கும்போது, அந்த பட்டணத்தில் இருக்கிற எல்லாவற்றையும் அழித்துவிடவேண்டும். அதிலிருக்கிற வெள்ளியும், பொன்னும் கர்த்தருக்கே உரியது. எந்த ஒரு பொருளும் இஸ்ரவேலர் எடுத்துக்கொள்ளும்படி அனுமதிக்கப்படவில்லை. ஆனால், ஆகான் வெள்ளியும், பொன்னும், பாபிலோனிய சால்வையும்

தனக்காக வைத்துக்கொண்டான். அது கண்டுபிடிக்கப்பட்டபோது அவனும், அவனுடைய மனைவி, பிள்ளைகள் ஆடு மாடுகள் அவன் குடியிருந்த கூடாரமும் ஆகோர் பள்ளத்தாக்கிலே கற்களால் மூடப்பட்டது. அவர்கள் அழிந்தார்கள். ஆகானும், அவன் மனைவி, பிள்ளைகளும் கண்ணீர் விட்டு கதறி இருப்பார்கள். அந்தக் கண்ணீரை கவனிப்பாரில்லை. அவர்களின் கூக்குரலை கேட்பாருமில்லை. அவர்கள்மேல் தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஒருவன் செய்த பாவத்தினால், அவன் குடும்பமும், அவனுக்கு உண்டான எல்லாம் அழிந்தது. இவ்வாறு தேவதூதன் மூலமாய் ஒரு கட்டளைக் கொடுக்கப்பட்டு, அதற்கு கீழ்படியாதவர்கள் இரக்கம் கிடைக்காமல் தண்டிக்கப்பட்டார்கள் என்று சொன்னால், தேவனுடைய குமாரன் மூலமாய் சொல்லப்பட்டவைகளுக்கு கீழ்ப்படியாதவர்கள், எவ்வளவு அதிகமாய் தண்டிக்கப்படுவார்கள் என்பதை உணர்த்துவதற்காகவே இந்த வசனம் சொல்லப்பட்டுள்ளது (யோசு.6:17-19,7:19-26).

**2:3-4 முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்.**

2:3-4 புதிய ஏற்பாட்டின் சத்தியம் முதலாவது இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அறிவிக்கப்பட்டது. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது. கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின (யோவான் 1:17).

**A.** முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டது.

**B.** பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே (அப்போஸ்தலர்) எழுதி உறுதியாக்கப்பட்டது.

**C.** தேவனாலே சாட்சிக்கொடுக்கப்பட்டது.

1. அற்புதங்கள் மூலமாக.

2. அடையாளங்கள் மூலமாக.

3. பலவித பலத்த செய்கைகள் மூலமாக.

4. பரிசுத்த ஆவியின் வரங்களைப் பகிர்ந்துக்கொடுப்பதின் மூலமாக தேவனால் சாட்சிக்கொடுக்கப்பட்டது.

## A. முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டது:

**உதாரணம்: a. இரட்சிப்பு**

1. சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும். (மாற்கு. 16:15)

2. விசுவாசிக்கவேண்டும்.

**I.** தேவனிடத்தில் விசுவாசம். (யோவான். 5:24, 14:1)

**II.** இயேசுவினிடத்தில் விசுவாசம். (யோவான். 6:40,47)

3. மனந்திரும்புதல், (லூக்கா 13:3,5)

4. அறிக்கையிடுதல். (மத் 10:32)

5. ஞானஸ்நானம். (மாற். 16:16) இவைகள் யாவும் கர்த்தர் (இயேசு) மூலமாக முதலாவது அறிவிக்கப்பட்டது.

**உதாரணம்: b. தொழுகை / ஆராதனை.**

1. ஜெபம். (மத். 7:21, யோவா. 16:23, 14:13-14)

2. பாடல். (மத். 26:30)

3. கர்த்தருடைய பந்தி. (யோவா. 6:48-58, மத். 26:26-30)

4. கொடுத்தல். (லூக். 6:38, மத். 6:19-21)

5. பிரசங்கம்.(மத். 28:19-20)

**உதாரணம்: C. சபை**

1. மத். 16:18 என் சபையை கட்டுவேன்.

2. யோவா. 2:21 தம்முடைய சரீரமாகிய (சபை) ஆலயத்தைக் குறித்துப் பேசினார்.

**உதாரணம்: d. யாரைத் தொழுதுக்கொள்ள வேண்டும்.**

1. யோவா, 4:24 தேவனைத் தொழுதுக்கொள்ள வேண்டுமென்று இயேசு போதித்தார்.

2. யோவா. 14:13, 16:23 என் நாமத்தினாலே பிதாவினிடம் கேளுங்கள் என்று இயேசு போதித்தார்.

## B. பின்பு அவரிடத்தல் கேட்டவர்களாலே எழுதி உறுதியாக்கப்பட்டது:

**உதாரணம்: a. இரட்சிப்பு**

1. எபே. 1:13, ரோமர்.1:16 சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும்.

2.ரோமர்.10:9 விசுவாசிக்கவேண்டும்.

I. தேவனிடத்தில் விசுவாசம். [ரோமர். 4:24]

II. இயேசுவினிடத்தில் விசுவாசம். [யோவா. 20:31, அப். 16:31]

3.மனந்திரும்புதல். [அப். 17:30, 2:38, 3:20]

4. அறிக்கையிடுதல்.[ரோமர். 10:9-10, 1யோவா. 4:15]

5.ஞானஸ்நானம். [அப். 2:38, ரோமர். 6:3-5]

**உதாரணம்: b. தொழுகை / ஆராதனை.**

1. ஜெபம். [எபே. 5:20, எபி 13:15, பிலி 1:10]

2. பாடல். [எபே. 5:19, கொலோ 3:16, பிலி 1:10]

3. கர்த்தருடைய பந்தி. [ அப். 20:7, 1கொரி. 11:23-31]

4. கொடுத்தல். [1கொரி. 16:1-2, 2கொரி. 9:6-7, 1தீமோ. 6:18-19]

5. பிரசங்கம். [அப். 20:7-13]

**உதாரணம்: C. சபை**

1. அப். 2:47 இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.

2. எபே. 4:12 கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.

3. கொலோ.1:18 அவரே சபைக்குத் தலையானவர்.

**உதாரணம்: d. யாரைத் தொழுதுகொள்ள வேண்டும்.**

1. எபே. 3:21 சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய், தேவனுக்கு மகிமை உண்டாக வேண்டும்.

2. கொலோ.3:17 எதை செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாய் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்.

3. எபி. 13:15 உதடுகளின் கனிகளாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் [இயேசு] எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம்.


## C. தேவனால் சாட்சி கொடுக்கப்பட்டது

இயேசு கிறிஸ்துவினால் முதலாவது அறிவிக்கப்பட்டவைகள், பின்பு அப்போஸ்தலர்கள் மூலமாய் சபைகளுக்கு ஒப்புவிக்கப்பட்டன. முதல் நூற்றாண்டு சபைகளிலேயோ, அல்லது விசுவாசிகளின் வாழ்க்கையிலோ இந்த உபதேசங்கள் கைகொள்ளப்படும்போது, அவைகளை குறித்து தேவன் சாட்சிக்கொடுத்திருக்கிறார்.

*[தொடரும்...]*

# வேதாகமம் – மனிதனுக்கு அளிக்கப்பட்ட பூரணமான திட்டம்


தமிழில். **Bro. D. சாமுவேல் ராஜ்**, சத்தி





**தே**வனை நீங்கள் விசுவாசிப்பது போல பலரும் விசுவாசிப்பதில்லை. அவர்களில் இந்து மதத்தை நம்புகிறவர்கள் இருக்கக்கூடும். சிலர் புத்த மதத்தையும் இன்னும் சிலர் முஸ்லீம் மதத்தையும் தழுவியிருப்பர். நாம் ஏன் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்ற கேள்விக்கான விடையைக் காண்போம்.

பல மனிதர்களின் எழுத்துக்களை விட வேதாகமத்தை மட்டுமே நாம் விசுவாசிக்க வேண்டும் என்பதைப் பல வழிகளில் நாம் நிரூபிக்க முடியும். பிற புத்தகங்களில் காணும் விஞ்ஞான சம்பந்தமான தவறுகளை வேதாகமத்தில் நாம் காணுவதில்லை என்பதைத் தெரிந்து கொள்வது அவற்றில் ஒரு வழியாகும். நமது கடந்த பாடத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் (மருத்துவம் விஞ்ஞானத்துறை) மனிதனால் விளக்க முடியாத அளவில் வேதாகமம் சரியாக இருப்பதைக் கண்டோம். பிற மதப் புத்தகங்களைப் பற்றி இவ்வாறு கூற முடியுமா?

இந்தப் பிரபஞ்சம் ஆகாய விரிவில் எவ்வாறு தொங்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி இந்து மதம் கடந்த காலத்தில் என்ன போதித்திருக்கிறது என்பதை வலது பக்கத்தில் காணும் படத்தில் பார்க்கலாம். பால் கடலில் நீந்தி கொண்டிருக்கும் ஒரு கடல் ஆமையின் மேல் நின்று கொண்டிருக்கும் நான்கு




யானைகளின் முதுகில் பூமி அமர்ந்திருப்பதை நீங்கள் கவனிக்க முடியும். இது மிகவும் நியாயமான ஒரு விளக்கம் தான். ஏனென்றால், இம்மக்கள் அறிந்த பலசாலியான மிருகம் யானை தான். அதோடு ஆகாயத்தில் பொருட்கள் மிக மெதுவாக அசைந்து கொண்டிருப்பதை அவர்கள் காண முடியும்போது அந்த மெதுவான அசைவுக்கு ஆமை தான் காரணம் என யூகிப்பது நியாயம் தானே? ஆனால், இது அறிவியல் ரீதியான உண்மை இல்லை.



ஒரு நாட்டில் மீனின் முதுகில் பூமி சவாரி செய்வதாகவும், பெரிய அலையின்கீழ் அந்த மீன் செல்லும் போதெல்லாம் பூமியை இருள் மூடுவதாகவும் தூர கிழக்கு நாடுகளில் உள்ள சில மதங்கள் கற்பித்தன. இதுவும் அறிவியல் கூற்று அல்ல.

அட்லஸ் என்னும் பெயருடைய பலசாலியான மனிதன் தன் தோளில் பூமியைத் தாங்கிக் கொண்டிருந்ததாக கிரேக்கர்கள் கூறினர்.



வேதாகமத்தை ஒருவர் படிக்கும் போது இப்படிப்பட்ட தவறுகளை அதில் கண்டுபிடிக்க இயலாது. பூமியை மிருகங்களோ அல்லது மனிதர்களோ தாங்கிக் கொண்டிருக்கும் கருத்தை வேதாகமம் எங்கேயும் குறிப்பிடவில்லை. அவர் உத்தர மண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து பூமியை அந்தரத்தில் தொங்க வைக்கிறார் என்பதாக வேதாகமத்தில் ஓர் இடத்தில் நாம் படிப்பது தான் உண்மை. (யோபு 26: 7) இக்கூற்று முற்றிலுமாக சரியானது, இதில் தவறு ஏதுமில்லை. பிற மதப்புத்தகங்களைப் படிக்கும்போது

ஒவ்வொன்றிலும் விஞ்ஞான சம்பந்தமான தவறுகளைக் காணலாம். எனவே, அவற்றை நம்புவது முற்றிலும் தவறான காரியமாகும்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என ஒப்புக்கொள்ள இன்னும் முக்கியமான காரணம் உண்டு. அதாவது, உண்மையில் மனிதன் எப்படி வாழ வேண்டும் என பிற மதப்புத்தகங்களில் காணப்படுவதில்லை. கிறிஸ்தவத்தைத் தவிர உலகிலுள்ள பிற மதங்களில் பலவற்றை எல்லா தெய்வங்களையும் வழிபடும் மதம் என அழைக்கிறோம். மனிதன் இயற்கையின் ஒரு பகுதிதான் என்றும் மனிதன் எவ்விதத்திலும் இயற்கையை மாற்றியமைக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ கூடாது என அவர்கள் போதிக்கின்றனர்.





மிருகங்கள் மறுபிறவி எடுத்த முன்னோர்கள் என்பதால் அவற்றை உணவாகக் கொள்ளலாகாது என இவற்றில் சில மதங்கள் போதிக்கின்றன. அவர்களும் அவர்களுடைய முன் னோர்களும் கடைப்பிடித்த மதத்தின் தவறான கொள்கைகள் காரணமாக, இன்று உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினிச் சாவுக்குப் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். மதத்தின் காரணமாக தேவைக்குப் போதுமான உணவை உற்பத்தி செய்யும் நிலங்களை அவர்கள் பயன்படுத்துவது இல்லை என்பதோடு அவர்கள் சரியான அளவில் சத்துணவுகளை சாப்பிடவும் மறுத்து வருகின்றனர். பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை, எங்கள் மதக் கோட்பாடுகளை மீறமாட்டோம் என்ற அவர்களுடைய மனோதிடத்தைக் கண்டு நாம் வியப்படைகிறோம். ஆனால், இந்தப் பிரச்சினையை அவர்கள் அனுபவிக்க அவர்கள் ஏற்றுக்கொண்ட மத போதனைகள் தான் காரணம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆதியாகமம் 1: 28ல் பூமியைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்து பறவைகளையும் பூமியில் நடமாடும் சகல மிருகங்களையும் ஆண்டுகொள்ள மனிதனிடம் தேவன் கூறுகிறார். மனிதன் இயற்கையை கட்டுப்படுத்தினால் தான் போதுமான உணவுப் பொருட்களைப் பெற்று சுகமாக வாழ முடியும் என நமக்குச் சொல்லப்படுகிறது.

தொடரும்...


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.






















## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



"Registered" with RNI No: TNTAM/2006/20466
Postal regn. No. Erode/26/2024 - 2026
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

## எங்களது இதர வெளியீடுகள்

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**


























### வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

To:

### திருமறை தியானம்

நம்பிக்கை TV
செவ்வாய் - காலை 6:30 - 7:00 மணி
நம்பிக்கை TV
வெள்ளி - காலை 7:30 - 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.